விளம்பர கட்டணம்
முழுபக்கம் - 10,000
அரைபக்கம் - 5000
கால்பக்கம் - 2500
விளம்பரம் மற்றும் இதழ் தொடர்புக்கு:
9443758068


# ஆதித்தமிழன்

நிறுவனர் இரா.அதியமான்

அறிவாயுதம்

மாதஇதழ்

AATHITHAMIZHAN ARIVAAYUTHAM

ஒடுக்கப்பட்ட மக்களுக்காக போராடும் இதழ்

வளைதளம் : www.aathithamizharperavai.com

| தனிச்சுற்றுக்கு மட்டும் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | பங்குனி - மார்ச் 2014 | இதழ் - 33 | பக்கம் 4 | நன்கொடை ரூ.5 |
|---|---|---|---|---|---|


## அருந்ததியர்களுக்கு 6 சதவீத உள் இட ஒதுக்கீடு வழங்க கோரி சமூக நீதி பரப்புரை பயணத்திற்கு அதிமுக அரசு தடை:

# வரலாறு காணாத மக்கள் எழுச்சியில்



6 சதவீத உள் இட ஒதுக்கீட்டிற்கான விழிப்புணர்வு ஊர்தியில் துண்டறிக்கையை மக்களுக்கு வழங்கும் தோழர்கள்

# அதியமான் பரப்புரை பயணம்:

## அருந்ததியர்களை தொடர்ந்து வஞ்சித்து வரும் அதிமுக அரசுக்கு வரும் நாடாளுமன்ற தேர்தலில் பாடம் புகட்டுவார்கள் அதியமான் பேட்டி



அருந்ததியருக்கு 6 சதவீத உள் இட ஒதுக்கீடு வழங்க வலியுறுத்தி நெருப்புப்போராளி நீலவேந்தன், ராணி (அஸ்தி) சாம்பலுடன் பிப்.17 - ந்தேதி கன்னியாகுமரியிலிருந்து திருப்பூர் வரை சமூகநீதி பரப்புரை பயணத்திற்கு ஆதித்தமிழர் பேரவை தமிழக அரசிடம் அனுமதி கோரியது. இதற்கு அதிமுக அரசு தடை விதித்தது. பிறகு பேரவை வலியுறுத்தலின் பேரில் அதன் பின்னர் பொதுக்கூட்டங்களுக்கு அனுமதி அளித்தது. பேரவை நிறுவனர் அதியமான் கன்னியா குமரி யில் பரப்புரை பயணத்தை தொடங்கி வைத்து 20 மாவட்டங்களில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு சுமார் 10 லட்சம் அருந்ததியர் மக்களை நேரில் சந்தித்து குறை களை கேட்டறிந்தார்.

சென்ற இடமெல்லாம் மக்கள் மேள தாளத் துடனும், வானவேடிக்கை யுடனும், இளைஞர் கள் ஆட்டம் பாட்டத்துடன் தடைகளை தகர் தெறிந்து உற்சாக வரவேற்பு அளித்தனர். இந்த எழுச்சியால் பேரவை வரலாறு காணாத வளர்ச்சி அடைந்துள்ளது என்றும், இந்த எழுச்சியை நான் இதுவரை கண்டதில்லை என்றும் அதியமான் பெருமை பொங்க கூறினார்.

அதிமுக அரசு அருந்ததியர் உள் ஒதுக்கீடு விஷயத்தில் மவுனமாகவும், மாமன்னர் ஒண்டிவீரன் மணிமண்டபத்தை கட்டி முடிக்காமல் காலம் தாழ்த்தியும் வருகிறது. இப்போது பிரச்சார பயணத்திற்கும் அதிமுக அரசு தடைவித்துள்ளது. இப்படி தொடர்ந்து அருந்ததியர்கள் விஷயத்தில் மெத்தனம் காட்டிவரும் அதிமுக அரசுக்கு வரும் நாடாளுமன்ற தேர்தலில் தக்க பாடம் புகட்டு வார்கள் என்று ஆதித்தமிழர் பேரவையின் நிறுவனர் அதியமான் பேட்டியளித்தார்.

**மதுரையில் மக்கள் எழுச்சியில் அதியமான்**

# அருந்ததியர்களுக்கு 6 சதவீத உள் இட ஒதுக்கீடு வழங்க கோரி கன்னியாகுமரி முதல் திருப்பூர் வரை சமூக நீதி பரப்புரை பயண நிகழ்வுகள்

### 17-2-2014 கன்னியாகுமரி


சமூகநீதி பரப்புரை பயணத்தை தொடங்கி வைத்து அதியமான் உரை.


கன்னியாகுமரியில் நீலசெங்கொடியேற்றுவிழா

### 18-2-2014 திருநெல்வேலி


நெல்லையில் மாவட்ட செயலாளர் கலைக்கண்ணன் உரை.


தூத்துக்குடியில் நடந்த உரிமை மீட்பு மாநாடு

### 19-2-2014 தூத்துக்குடி


தூத்துக்குடியில் நிறுவனர் அதியமான் உரை. மேடையில் கண்ணன் அய்யா மற்றும் தோழர்கள்


தூத்துக்குடி விளக்க பொதுக்கூட்டத்தில் ஜெனிபர் ராமச்சந்திரன் கலந்து கொண்டார். உடன் து.பொதுச்செயலாளர் சு.க.சங்கர்

### 20-2-2014 விருதுநகர்


விருதுநகரில் மாவட்ட செயலாளர் பூவைஈஸ்வரன் உரை.


விருதுநகரில் ஆதித்தமிழச்சிகள் மற்றும் குழந்தைகளுடன்

### 21-2-2014 ராமநாதபுரம்


ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் விளக்க பொதுக்கூட்டம்


பரமக்குடியில் விளக்க பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டஆதித்தமிழச்சிகள்

### 22-2-2014 சிவகங்கை


சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் விளக்க பொதுக்கூட்டம்


மானாமதுரையில் கொடியேற்றி வைத்து ஆதித்தமிழர்கள் மத்தியில் நிறுவனர் பேச்சு. உடன் மாவட்ட செயலாளர்

### 23-2-2014 மதுரை புறநகர்


மதுரை புறநகரில் மக்கள் வரவேற்பு


மதுரை அலங்காநல்லூரில் எழுச்சி வரவேற்பு

### 24-2-2014 மதுரை மாநகர்


மதுரை கிழக்கு ஒன்றியத்தில் கொடியேற்றி உரை. உடன் அமைப்புசெயலாளர்


மதுரை கபீர்நகரில் மாவட்ட, மாநில நிர்வாகிகள் வரவேற்பு.

### 25-2-2014 தேனி


தேனி மாவட்டத்தில் உரிமை மீட்பு பொதுக்கூட்டம்


தேனி மாவட்டத்தில் உரிமை மீட்பு பொதுக்கூட்டம்

### 26-2-2014 திண்டுக்கல்


திண்டுக்கல் மாநகரில் கொடியேற்றுவிழா



நிலக்கோட்டை ஒன்றியத்தில் பேச்சு

### 27-2-2014 திருச்சி


திருச்சியில் உரிமைமீட்பு விளக்க கூட்டத்தில் அதியமான் பேச்சு. மேடையில் மாவட்ட, மாநில நிர்வாகிகள்


திருச்சியில் நிறுவனருக்கு ஆதித்தமிழச்சிகள் நினைவு பரிசு

### 28-2-2014 கரூர்


கரூரில் விளக்கவுரை மேடையில் நிறுவனருடன் ஆதித்தமிழர்கள் புகைப்படம்.


கரூர் நடந்த உரிமைமீட்பு கூட்டத்தில் தோழர்கள்

### 2-3-2014 சேலம்



### 3-3-2014 ஈரோடு


ஈரோட்டில் நடந்த 6 சதவீத இடஒதுக்கீட்டின் உரிமை மீட்பு மாநாட்டில் நிருவனர் அதியமான். தோழர் வீரமுருகு மற்றும் மாவட்ட , மாநில நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### 5-3-2014 கோவை



### 6-3-2014 திருப்பூர்


திருப்பூரில் பரப்புரை பயணம் நிறைவுவிழாவில் நிதிச்செயலாளர் பெருமாவளவன் உரை. மேடையில் நிறுவனர் அதியமான் மாவட்ட செயலாளர் தமிழ்வேந்தன் மற்றும் தோழர்கள்



கோவையில் நடந்த மாநில செயற்குழு கூட்டத்தில் பொங்கலூர் பழனிச்சாமி பேசினார்.

## அதியமானுக்காக விடிவிடிய சோதனைச்சாடியில் காத்திருந்த போலீசார்

அருந்ததியருக்கு 6 சதவீத உள்இடஒதுக்கீடு வழங்க வலியுறுத்தி நெருப்புப்போராளி நீலவேந்தன், ராணி (அஸ்தி) சாம்பலுடன் பிப்.17 -ந்தேதி கன்னியாகுமரி யிலிருந்து திருப்பூர்வரை சமூக நீதி பரப்புரை மேற் கொண்டார். 23-2-14 ல் மதுரையில் மாநகர் கிழக்கு. மேற்கு. தெற்கு. வடக்கு ஒன்றியங்களுக்கு சென்று கொடி யேற்றியும், பெயர் பலகையை திறந்து வைத்தும் அருந்ததிய மக்களிடம் 6 சதவீத இட ஒதுக்கீட்டினை பற்றி விழிப் புணர்வு பிரச்சாரம் செய்தார். அப்போது அதியமானுக்காக புறநகர் சோதனைச்சாவடியில் போலீசார் விடிவிடிய காத்திருந்தனர் என்பது குறிப்பிடதக்கது.

### மதுரை அருகே வடிவேல்கரையில்

## அதியமான் பாதுகாப்புக்காக நின்றிருந்த சப்–இன்ஸ்பெக்டருக்கு அரிவால் வெட்டு

அருந்ததியருக்கு 6 சதவீத உள்இடஒதுக்கீடு வழங்க வலியுறுத்தி நெருப்புப்போராளி நீலவேந்தன், ராணி (அஸ்தி) சாம்பலுடன் பிப்.17 -ந்தேதி கன்னியாகுமரி யிலிருந்து திருப்பூர்வரை சமூக நீதி பரப்புரை மேற் கொண்டார். 23-2-14 ல் அன்று மதுரை புறநகர் அருகே வடிவேல் கரையில் ஆதித்தமிழர் பேரவையின் விழிப்புணர்வு கூட்டம் நடைபெற இருந்தது. இதற்கு காவல்துறை அனுமதியும்,பாதுகாப்பும் அளித்தனர். அப்போது சில சமூக விரோதிகள் மது அருந்தி ரோட்டில் கலாட்டா செய்தனர். அப்போது பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த இன்ஸ்பெக்டர் மோகன் அவர்களை எச்சரித்தார். சிறிதுநேரம் கழித்து பின்பு குடிபோதையில் வந்து தகராறு செய்து அரிவாளால் கழுத்து மற்றும் தோழ்பட்டையில் வெட்டிவிட்டு சென்றுவிட்டனர் படுகாயமடைந்த காவல் அதிகாரியை மத்துவனைக்கு அனுப்பி வைத்தனர். பின்பு தனியர் மருத்துவமனையில் சிசிக்சை பெற்று வருகிறார். இது சம்பந்தமாக 2 பேரை கைது செய்து விசாரணை செய்து வருகிறார்கள்.


அருந்ததியருக்கு 6 சதவீத இடஒதுக்கீடு வழங்கி வலியுறுத்தி பரப்புரை பயணம் மேற்கொண்டார். அப்போது நெல்லையில் உள்ள அவரது சகோதரி நிறுவனர் அதியமானுக்கு வரவேற்பு அளித்தார். உடன் மாவட்ட நிர்வாகிகள்.


கடந்த மார்ச்-13 அன்று இராமநாதபுர மாவட்ட செயலாளர் இரா.சுகுமார் (எ) தமிழ்மாறன் மரணமடைந்தார். அவருக்கு பேரவை நிறுவனர் அதியமான் வீரவணக்கம் செலுத்தினார். உடன் அமைப்புச்செயலாளர்.


நான் கற்ற கல்வி என் சமூக மக்களின் விடுதலைக்கு பயன்படைவில்லையெனில் என்னை நானே சுட்டுக்கொள்வேன்.

-புரட்சியாளர் அம்பேத்கர் பொன்மொழி

<u>மதுரை களிமங்களம் பகுதியில்</u>

# கொடியை ஏற்றக்கூடாது என்று தடுத்தவர்களை விரட்டியடித்த ஆதித்தமிழர்கள்

அருந்ததியர்களுக்கு 6 சதவீத இடஒதுக் கீட்டிற்காக சமூக நீதிப்பரப்புரை பயணம் மேற்கொண்டு மதுரை வந்த நிறுவனர் அதியமான் மதுரை களிமங்களம் பகுதியில் கொடியேற்றி மக்களின் குறைகளை கேட்டறிய செல்ல திட்டமிட்ருந்தார். இதைபொருத்துக்கொள்ள முடியாத சில விஷமிகள் அப்பகுதியில் 22-2-14 அன்று இரவு பள்ளர் சமூகத்தை சேர்ந்த சிலர் இப்பகுதியில் கொடியேற்றக்கூடாது என்று அப்பகுதி அருந்ததிய பெண்களையும், இளைஞர்களையும் தாக்க உருட்டுக் கட்டையுடன் வந்து மிரட்டியுள்ளனர். இதை கண்ட பேரவையினர் வீருகொண்டு எழுந்து ஆண்களும், பெண்களும் மற்றும் அப்பகுதி பொதுமக்களும் சேர்ந்து விரட்டி அடித்தனர். இதைகண்ட கும்பல் தலைதெறிக்க ஓடி மறைந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது. பிறகு மறுநாள் 23-2-14 அன்று நிறுவனர் அப்பகுதிக்கு வந்து கொடியேற்றி மக்களை சந்தித்து குறைகளை கேட்டறிந்தார்.



23-3-14 அன்று கோவை ஆதித்தமிழன் அரங்கில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இதில் ஆதித்தமிழர் பேரவையின் நிறுவனர் அதியமான் தனது 62-வது பிறந்தநாளை பேரவை தோழர்களுடன் கொண்டாடினார். உடன் பொதுச்செயலாளர், துணைப்பொதுச்செயலாளர், மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

# அதியமான் பிறந்தாளையொட்டி நெல்லையில் 62பேர் ரத்ததானம்

நெல்லையில் நிறுவனர் அதியமானின் 62 -வது பிறந்தநாளை முன்னிட்டு மாணவர் பேரவை மற்றும் இளந்தமிழர் பேரவையை சேர்ந்த 62 பேர் குருதிக்கொடை வழங்கினர். இதில் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் டாக்டர் தனசிங், டாக்டர் சாந்தாமணி தனசிங் மருத்துவ அலுவலர் ஆகியோர் குருதிக்கொடையை துவக்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் மாநகர மாணவரணி செய லாளர் மு.தமிழ் தலைமை வகித்தார். தலைவர் சுந்தர்ராசு, மாவட்ட செயலாளர் கலைக் கண்ணன், நிதிச்செயலாளர் சண்முகசுந்தரம், கொ.ப.செ. காலேப், செய்தி தொடர்பாளர் பாரத், மா.அமைப்பு செயலாளர் ஆதிசக்தி, மாவட்ட து.செயலாளர் சுரேசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில கொ.ப.செய லாளர் சுக.சங்கர் இளந்தமிழர் பேரவை கதிரவன், தமிழக மக்கள் சனநாயக கட்சி செயலாளர் வழக் கறிஞர் அப்துல் ஜப்பார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்.

### கோவில்பட்டி

இதேபோல் கோவில்பட்டியிலும் ரத்ததான முகாம் மற்றும் ரத்தம் வகை கண்டறிதல் முகாம் நடைபெற்றது. இதில் பேரவையின் மாவட்ட செயலாளர் திலீபன் தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் கோவிந்தராஜ், துணைத்தலைவர் கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட அமைப்பு செயலாளர் சுப்புத்தாய், மாவட்ட நிதிச்செயலாளர் தமிழ்செல்வன் முன்னிலை வகித்தனர். மற்றும் எராளமான தோழர்கள் கலந்து கொண்னர்.






வரும் நாடாளுமன்ற தேர்தலை எப்படி எதிர்கொள்வது என்று கோவையில் உள்ள ஆதித்தமிழன் அரங்கில் 23-3-14 அன்று மாநில செயற்குழு கூட்டம் நடைபெற்றது. அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி பேசினார். அருகில் நிறுவனர் அதியமான்.பொதுச்செயலாளர் நாகராசன், துணைப்பொதுச்செயலாளர் சு.க.சங்கர், நிதிச்செயலாளர் பெருமாவளவன், அமைப்புச்செயலாளர் விடுதலைவீரன் மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நெல்லையில் பேரவை நிறுவனர் அதிமாயனின் 62 பிறந்த நாளையொட்டி ரத்ததான முகாமை ஆரம்ப சுகாதார நிலையம் டாக்டர் தனசிங் மற்றும் மருத்துவ அலுவலர் டாக்டர் சாந்தாமணி தனசிங் ஆகியோர் துவக்கி வைத்தனர்.



நாடாளுமன்ற தேர்தலில் திமுக கூட்டணிக்கு ஆதித்தமிழர் பேரவை ஆதரவு அளிக்கும் என்று திமுக தலைவர் கலைஞரை சந்தித்து பேரவையின் நிறுவனர் அதியமான் ஒப்புதல் அளித்தார். உடன் பேரவை மாநில, நிர்வாகிகள்.



திமுக முன்னாள் மத்திய அமைச்சர் ராசா நிறுவனர் அதியமானை அவரது இல்லத்தில் மரியாதை நிமித்தமாக சந்தித்தார். உடன் பொதுச்செயலாளர் நாகராசன், கொ.ப.செயலாளர் சு.க.சங்கர், நிதிச்செயலாளர் பெருமாவளவன்.

# மனிதக்கழிவை மனிதர்களே அகற்றும் அவலத்தை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும்

## சுப்ரீம் கோர்ட்டு உத்தரவு:



மனிதர் கழிவை மனிதர்களே அகற்றும் அவலத்தை மாநில, மத்திய அரசுகள் உடனடியாக முடிவுக்கு கொண்டு வரவேண் டும் என்று சுப்ரீம்கோர்ட்டு உத்தரவு பிறப்பித்துள்ளது.

### நீதிபதி தீர்ப்பு

துப்புரவு தொழிலாளர்கள் இயக்கம் மத்திய அரசுக்கு எதிராக தொடுத்த பொதுநல வழக்கின் மீது மார்ச் 28- அன்று சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி பி.சதாசிவம் மற்றும் நீதிபதிகள் ரஞ்ஜன் கோகோய், என்.வி. ரமணா ஆகியோர் அடங்கிய அமர்வில் இறுதி தீர்ப்பு வழங்கப் பட்டது. அந்த தீர்ப்பில் கூறப்பட் டுள்ளதாவது:-

துப்புரவு தொழிலாளர்களின் நலனை பேணும் வகையில் இயற்றப்பட்ட மனித கழிவை மனிதனே அகற்றும் தொழில் தடுப்பு மற்றும் மறுவாழ்வு சட் டம் 2013-ல் வரையறுக்கப் பட்டுள்ள அனைத்து விதிமுறை களையும் மத்திய, மாநில அரசுகள் கடைபிடிக்க வேண்டும். அந்த சட் டத்தில் கூறப்பட்டுள்ள அனைத்து பிரிவுகளும் கண்டிப் பாக அமல்படுத்தவேண்டும்.

### மாற்று தொழில்

துப்புரவு தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு அனைத்து கல்வி உதவித்தொகைகளும் வழங்கப் பட வேண்டும். துப்புரவு தொழி லாளர்களுக்கு நிலம் மற்றும் வீடு கட்ட உதவித்தொகை வழங்க வேண்டும். அல்லது உதவித் தொகையுடன் வீடு வழங்க வேண்டும். துப்புரவு தொழி லாளியின் குடும்ப உறுப் பினர்களுக்கு உதவித்தொகை யுடன் தொழிற் பயிற்சி அளிக்கப் பட வேண்டும். குடும்பத்தில் ஒருவருக்கு மாற்று தொழில் செய்வதற்கான மானியம் மற்றும் கடன் தொகை வழங்க வேண்டும்.

எந்தவிதமான நெருக்கடியான நிலையிலும் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் இன்றி பாதாள சாக்கடையில் இறங்குவது குற்ற மாக அறிவிக்கப்பட வேண்டும். பாதாள சாக்கடை விபத்துக்களில் இறந்தவர்களின் குடும்பத்திற்கு ரு.10 லட்சம் நஷ்ட ஈடாக வழங்க வேண்டும்.

ரெயில் தண்டவாளங்களில் கழிவு அள்ளுவதை முடிவுக்கு கொண்டுவரும் வகையில் ஒரு கால வரையறைக்குள் ஒரு செயல் திட்டத்தை உருவாக்க வேண்டும். துப்புரவு தொழிலாளர்கள் கவுரவ மான முறையில் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள அனைத்து ஆதரவையும் அளிக்க வேண்டும்.

1993-ம் ஆண்டில் இருந்து பாதாள சாக் கடைகள் மற்றும் கழிவுத் தொட்டிகளில் இறந்து போன தொழிலாளிகளின் குடும்பங்களை கண்டறிந்து ஒவ்வொரு மரணத்துக்கும் ரூ.10லட்சம் இழப்பீடுத் தொகை வழங்க வேண்டும். மேற்கண்ட உத்தரவை செயல்படுத்தும் பொறுப்பை அனைத்து மாநில அரசுகளுக்கும் மத்திய அரசுக்கும் அளிக் கப்படுகிறது. அப்படி செயல்படுத்த தவறுகிறவர் கள் மீது மாநில அரசும் மத்திய அரசும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். இதில் யாருக்கேனும் பாதிப்பு ஏற்பட்டால் அவர்கள் சம்பந்தப்பட்ட உயர்நீதி மன்றத்தை அணுகலாம். இவ்வாறு சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

**ஆதித்தமிழர் பேரவையின் போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியே**

### ஆதித்தமிழர்பேரவை போராட்டம்

கையால் மலம் அள்ளும் பிரச்சினைக்காக ஆதித்தமிழர் பேரவை 10 ஆண்டுகளாக போராடியதன் விளைவாக சுப்ரீம் கோர்ட்டு தடை ஆணை பிறப்பித்துள்ளது. இது ஆதித்தமிழர் பேரவைக்கு கிடைத்த வெற்றியே.

Printed: Publisher and Editor R.Athiyamaan, No.713, Mettupalayam salai, R.S.Puram, Coimbatore-2. Mobile: 94430 84642.
Meenakshe Offset Printers, 7, Sonaiyar Koil Street, 4th P.T.R. Road, Madurai-625 002. Off: 0425-2524731, Cell: 75981 94731

வெளிடுபவர்: இரா.அதியமான், 713, மேட்டுப்பாளையம் சாலை, ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர்-2. கைபேசி: 94430 84642
அச்சிடுவோர்: மீனாட்சி ஆப்செட் பிரிண்டர்ஸ், 7 சோணையர்கோவில்தெரு, 4-வது பி.டி.ஆர்.சாலை, மதுரை-2. தொலைபேசி: 0452-2524731
மின் அஞ்சல் தொடர்புக்கு : adhiyamaanperavai@gmail.com பேரவை செய்திகளை பார்க்க வலைதளம் :www.aathithamizharperavai.com